3SS
MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி உ. குரோதனஹு மார்கழிமீ பகுதி கஉ.

Vol. 2. DECEMBER & JANUARY 1926. No. 12.

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

காரப்பங்காடு,
உபயவேதாந்த வித்வான் சிங்கராசார்யஸ்வாமி எழுதுவது.

[223-ம் பக்கத் தொடர்ச்சி.]

அஹிர்ப்புத்ந்யஸம்ஹிதையிலும் நம: சப்தார்த்த நிரூபணாவஸரத்தில், நம: சப்தத்துக்கு ஸ்தூலயோஜனை, ஸூக்ஷ்மயோஜனை, பரயோஜனை என்று மூன்று யோஜனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த மூன்றுயோஜனைகளிலும் ப்ரபத்திக்கு உபாயத்வமில்லை என்று ஏற்படுகிறது.

அவைகளில் முதல் யோஜனையில், நம: சப்தம் 'ணமுல் ப்ருஹ்வீபாவே' என்கிற தாதுவால் நிஷ்பந்நமானதால், அது ஸ்வரூபாந்தர்கதமாய் ஸ்வயம் ப்ரயோஜநமான சேஷவ்ருத்தியைச் சொல்லுகிறது; அதாவது:— ஜ்ஞானவான் தன்னைக்காட்டிலும் ஸர்வப்ரகாரத்தாலும் உத்க்ருஷ்டனைக் குறித்து, ஸ்வபாவஸித்தமாய் வணங்குகை நம: சப்தார்த்தமென்பதாம்.

லோகத்தில் சேதனர்கள் உத்க்ருஷ்டர்களென்றும், அபகிருஷ்டர்களென்றும் இரண்டு வகையாயிருப்பர்கள். ஸர்வப்ரகாரத்தாலும் உத்கர்ஷம் எவனிடத்திலிருக்கிறதோ அவன் உத்கிருஷ்ட சப்தத்துக்கு முக்யார்த்தம்; அவனைக்காட்டிலும் வேறாயிருக்கிறவர்கள் அபகிருஷ்டர்கள்; சேஷபூதர்கள். இவர்களில் சேஷிகளா

யுள்ளவர்களை சேஷபூதர்கள் ப்ரயோஜனத்தை அபேக்ஷியாமல் வணங்குகை ஸ்வாபாவிகம், ஆதலால் ஸர்வப்ரகாரத்தாலும் உத்கர்ஷமுள்ளவன் ஸர்வேசுவரனுகையாலும், அவனைக்காட்டிலும் மற்றவர்கள் அபகிருஷ்டர்களாகையாலும், ஸர்வேசுவர விஷயத்தில் மற்ற சேதனர்கள் வணங்குகை ஸ்வயம் ப்ரயோஜன சேஷவ்ருத்தி ரூபம். இது மாநஸமாயும், வாசிகமாயும் காயிகமாயுமிருக்கும்.

அவைகளில் மானஸமாவது:- ஸர்வேசுவரன் உத்கிருஷ்டன்; நான் அவனிற்காட்டில் அபகிருஷ்டன் என்கிற எண்ண முடைமை வாசிகமாவது:- இந்த எண்ண முடைமையே காரணமாக 'நம:' என்று உச்சரிக்கை. காயிகமாவது:- அவ்வெண்ணத்தோடு கூடியே உத்கிருஷ்டனை வணங்குகையாம். 'நமதி அநேந' என்ற கரணவ்யுத்பத்தியில் காயிகமான நமஸ்காரத்துக்குக் காரணம் கீழ் நிரூபிக்கப்பட்ட எண்ணமேயாகையால் அந்த தன்தாழ்வு நினையுமெண்ணமும் நம: சப்தார்த்தமாகிறது. இப்படியாக இவன் தன்னுடைய நைச்யத்தைத் தெரிவிப்பதான நமஸ்காரத்தைப் பார்த்து ஸர்வேசுவரன் "ஸுக்ரீவம் சரணங்கத:" என்கிறபடியே இவனை வணங்குகிறபடியால் 'பரம்நாமயதீ' என்கிற வ்யுத்பத்தியைக் கொண்டும் 'நம:' சப்தம் நிஷ்பந்நமாகிறது. இப்படி உத்கிருஷ்டனைக் குறித்து அபகிருஷ்டன் த்ரிவிதகரணங்களாலும் செய்யும் நமஸ்காரமானது தன்னுடைய அபகர்ஷஸூசகமாயும் ஸ்வாபாவிகமாயுமுள்ள வ்யாபார விசேஷமாகையால் இந்த நமஸ்காரம் உபாயமாக மாட்டாது.

இப்படி மூன்று கரணங்களாலும் செய்யப்படும் நமஸ்காரம் பூர்ணசேஷவ்ருத்திரூபமாம். இவைகளில் ஒன்று குறைந்தாலும் பூர்ணமாகமாட்டாது. எப்படி என்றால், ஸர்வேசுவரன் தன் விஷயத்தில் கைங்கர்யத்தைச் செய்யும்படியாகவே கரணங்களைக் கொடுத்திருக்கிறபடியால் அவைகளில் ஒரு கரணங் குறைந்தாலும் அவன் திருவுள்ளத்துக்குக் குறைவுண்டாவதால் கைங்கர்ய பூர்த்தியில்லை. ஆதலால் மூன்று கரணங்களாலும் செய்யப்படும் நமஸ்காரமே பூர்ணசேஷவ்ருத்திரூபமாகக் கொள்ளத்தக்கது. இப்படியிருந்துள்ள 'நம:' சப்தார்த்தமான நமஸ்காரத்தினுடைய அவஸ்தா விசேஷங்களே தன்னடையே வரக்கூடிய ஸ்வபாவங்களாயுள்ள அங்கங்களாகையால் அவை இனி நிரூபிக்கப்படும்.

அவற்றுள் முதலாவது அங்கம்:- நான் பரனான புருஷனை உத்தேசித்து வணங்குகை எனக்கு சாசுவதமான ப்ரயோஜனம்; இதைத்தவிர வேறு ப்ரயோஜனமில்லை; என்கிற புத்தி விசேஷம். இந்த புத்தி விசேஷத்துக்கு விரோதி பலத்தை அபேக்ஷிக்கை. என்றிப்படிச் சொல்லியிருப்பதால் இது உபாயமன்று என்று ஸித்திக்கிறது.

மேல் கார்ப்பண்ய ரூபமான இரண்டாவது அங்கம் நிரூபிக்கப்படும். அதாவது இப்படி ஸ்வயம் ப்ரயோஜனமாயிருந்துள்ள நம: சப்தார்த்தத்தையுடையவர்களுக்கு 'பொய்ந்நின்ற ஞானமும்' இத்தியாதிப்படியே அநாதியான விபரீதவாஸநாவிசேஷத்தாலும் 'மாயும் வகையறியேன் வல்வினையேன் பெண்பிறந்தே' என்கிறபடியே ஸ்வாபாவிகமான பாரதந்த்ரியத்தாலும், ஹேயமான சரீரத்தினுடைய ஸம்பந்தத்தாலும் 'என்னான் செய்கேன்' என்கிறபடி ஜ்ஞானகர்மாக்களுடைய ஹாநியாலே, 'நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்' என்கிறபடியே அநுஸந்திக்கை:- இந்த அநுஸந்தானம் ஸ்வாபாவிக பாரதந்த்ரியாநுஸந்தான கொர்ப்பமாகையாலே 'அஸந்தேசாத்து ராமஸ்ய' 'மமைவம் துஷ்கிருதம்கிஞ்சித்' 'ஏஷா விபத்பா மஹமல்ப பாக்யா' என்கிறபடியே தான் சக்தையாயிருக்கச் செய்தேயும் ஸ்வரக்ஷணத்தில் ப்ரவ்ருத்தியில்லாத பிராட்டியினுடைய ஆசாரத்தாலே சிக்ஷிக்கப்பட்ட அத்யந்தபாரதந்த்ரிய நிஷ்டையாகையால், இதற்கு விரோதி ஸ்வரக்ஷணத்தில் பரவர்த்திக்கைக்குறுப்பான ஸ்வஸ்வாதந்த்ரிய ப்ரமமென்று சொல்லப்பட்டிருப்பதால் ஸ்வரக்ஷண ப்ரவ்ருத்தி ரூபமான உபாயாநுஷ்டானம் கூடாதென்று ஸித்திக்கிறது.

இனி விசுவாஸ ரூபமான மூன்றாவது அங்கம் நிரூபிக்கப்படும். அதாவது:— ஸர்வேசுவரன் பரனாயிருக்கச் செய்தேயும், ஸர்வ பூதங்களிடத்திலும் கிருபையுள்ளவனாகையால் அநுக்கிரஹத்திலொன்றிலுமே புத்தியுள்ளவனென்கிற திருடாத்யவஸாயம்; முந்தி நிரூபிக்கப்பட்ட கார்ப்பண்யாநுஸந்தானத்தாலுண்டான பயத்தைப் போக்குமதான பகவத்குணாநுஸந்தான ரூபமான விசுவாஸம். இதற்கு விரோதி அவரவர்களாலநுஷ்டிக்கப்படுகிற உபாயங்களுக்கநுகுணமான பலத்தைக் கொடுக்கிறவனாய்க்கொண்டு உபேக்ஷகனாயிருப்பன் என்கிற ஞானவிசேஷம். இந்த ஜ்ஞானம்

ப்ரபத்தி உபாயமாகும் பக்ஷத்தில் அந்த உபாயத்துக் கநுகுணமான பலத்தைக் கொடுக்கிறவனுயக்கொண்டு உபேக்ஷகனுயிருப்பன் என்பதை விஷயீகரிப்பதால் ப்ரபத்திக்கு முக்யாங்கமான விசுவாஸம் தடைபடுவதால் ப்ரபத்தி உபாயமாகமாட்டாது.

இனி, நாலாவது அங்கம் நிரூபிக்கப்படுகிறது:— அதாவது ஸர்வேசுவரன் நம்முடைய கார்யத்தை நிர்வஹிக்க சக்தியுடையவன் என்கிற பகவத் சக்த்யநுஸந்தான ரூபமான கோப்த்ரு சக்தி நிருபணம். இது 'சரைஸ்து ஸங்குலாம் கிருத்வா' இத்யாதிப்படியே 'களைவாய் துன்பங்களை யாதொழிவாய் களைகண்மற்றிலேன்' என்று தன்னுடைய அபிப்ராயத்தைத் தெரிவிக்கையாகிய கோப்த்ருத்வ வரணத்துக்குக் காரணமாயிருக்கும், இதற்கு விரோதி, 'சங்கேமத் பாக்ய ஸம்க்ஷயாத்' என்கிறபடியே தன்னுடைய பாக்கிய ஹானியாலே ப்ரும்ஹாஸ்த்ரம்போல வேறு ஸஹாயத்தை அபேக்ஷியாமல் கார்யத்தைச்செய்ய சக்தனுன ஸர்வேசுவரனிடத்தில் குணுபாவத்தை சங்கிக்கை.

இனி ஐந்தாவது அங்கம் நிரூபிக்கப்படும்:— அதாவது கீழ்ச் சொல்லப்பட்ட அங்கங்களோடே கூடின நம: சப்தார்த்தத்தை அநுஷ்டிக்குமவர்களுக்குத் தன்னடையே வரக்கடவதான 'கிற்பன் கில்லேனென்றிலன்' என்றும் 'யாதானும் பற்றி நீங்கும் விரதம்' என்றும் சொல்லப்படுகிற ப்ராதிகூல்யவர்ஜநம். இதற்கு விரோதி ப்ரயோஜநாந்தர ப்ரவ்ருத்தி, ஸாதநாந்தர ப்ரவ்ருத்தி: இவைகள்.

இனி ஆறுவது அங்கம் நிரூபிக்கப்படுகிறது:— அதாவது ஸமஸ்தமான ஸ்தாவர ஜங்கமங்களும் ஸர்வேசுவரனுக்கு சரீரங்கள்; அவைகளுக்கு அநுகூலனுயிருக்கக்கடவேன் என்கிற அத்யவஸாய விசேஷரூபமான ஆநுகூல்யம். இதுக்கு விரோதி லௌகிக மர்யாதா நிராகரணம். இப்படி ஸ்வயம் ப்ரயோஜனமாயுள்ள நம: சப்தார்த்தமும் இத்தை அநுஷ்டிக்குமவனுக்கு ஸம்பாவிதஸ்வபாவ விசேஷங்களான அங்கங்கள் ஆறும், அவைகளுக்கு விரோதிகளாயுள்ளவைகளுடைய நிவ்ருத்தி ரூபங்களான உபாயங்களும் நிரூபிக்கப்பட்டன. கீழ் நிரூபித்தபடி ப்ரபத்திக்கு உபாயத்வம் ஏற்படவில்லை. இந்த அர்த்தங்களை யெல்லாம் பிரதிபாதிக்கிற அஹிர்ப்புத்நிய ஸம்ஹிதா சுலோகங்கள் இங்கே காட்டப்படுகிறன.

அவை:—

“ப்ரேக்ஷாவத: ப்ரவ்ருத்திர்யா ப்ருஹ்வீபாவாத்மிகா ஸ்வத:
உத்க்ருஷ்டம் பரமுத்திச்ய தந்நம: பரி கீயதே
லோகே சேதந வர்க்கஸ்து த்விதைவ பரிகீர்த்தித:
ஜ்யாந் சததைவாஜ்யாந் நைவாப்யாம் வித்யதேபர:
காலதோ குணத:சைவ ப்ரகர்ஷோயத்ர திஷ்டதி
சப்தஸ்தம் முக்யயா வ்ருத்யா ஜ்யாநித்ய வலம்பதே
அத:சேதந வர்க்கோந்ய: ஸ்ம்ருத: ப்ரத்யவரோ புதை:
அஜ்யாயாந்: சாநயோர்யோக: சேஷசேஷி தயேஷ்யதே
அஜ்யாயாம் ஸோ(அ)பரே ஸர்வே ஜ்யாநே கோமத:பர:
நந்த்ரு நந்தவ்ய பாவேந தேஷாம் தேந ஸமந்வய:
நந்தவ்ய: பரம:சேஷி சேஷோநந்தார: ஈரித:
நந்த்ரு நந்தவ்ய பாவோயம் நப்ரயோஜந பூர்வக:
நீசோச்சயோ ஸ்வபாவோயம் நந்த்ரு நந்தவ்ய தாத்மக:
உபாதிரஹிதே நாயம் யேந பாவேநசேதந:
நமதிஜ்யாயஸே தஸ்மைதத்வா நமநமுச்யதே
பகவாந் மேபரோ நித்யம் அஹம் ப்ரத்ய வா: ஸதா
இதிபாவோ நம:ப்ரோக்த: நமஸ: கரணம்ஹிஸ:
நாமயத்யபிவா தேவம் ப்ரஹ்வீ பாவயதி த்ருவம்
ப்ரஹ்வீ பவதி நீசேஹி பரோநைச்யம் விலோகயந்
அதோவா நமஉத்திஷ்டம் யத்தந்நாமயதிஸ்வயம்
வாசா நமஇதி ப்ரோச்ய மநஸா வபுஷாசயத்
தந்நம: பூர்ணமுத்திஷ்டம் அதோந்யத் ந்யூந முச்யதே
இயம்கரண பூர்த்திஸ்யாத் அங்கபூர்த்தி மிமாம்ச்ருணு
சாச்வதீ மம ஸம்ஸித்தி: இயம்ப்ரஹ்வீ பவாமியத்
புருஷம் பரமமுத்திச்ய நமேஸித்தி ரதோந்யதா
இத்யங்க முதிதம் ச்ரேஷ்டம் பலேப்ஸா தத்விரோதிநீ
அநாதி வாஸநா யோகாத் அநைச்வர்யாத் ஸ்வபாவஜாத்
மலாவகுண்டிதத்வாச்ச த்ருக்ரியா விஹதிர்த்தியா
தத்கார்ப்பண்யம் ததுத்போதம் த்விதீயம் ஹ்யங்க மீத்ருசம்
ஸ்வஸ்வாதந்த்ர்யா வபோதஸ்து தத்வ்யாகாத: உதீர்யதே
பரத்வே ஸதிதேவோயம் ஸர்வபூதாநு கம்பந:
அநுக்ரஹைகதீர் நித்யம் இத்யேதத்துத்ருதீயகம்
உபேக்ஷகோ யதாகர்ம பலதாயீதியாமதி:

விச்வாஸாத்மகமேதத்து த்ருதீயம் ஹந்திவைஸ்தா
ஏவம் பூதோப்யசக்தஸ்ஸங் மத்ராணம் பவிதும் க்ஷம:
இதிபுத்யாஸ்ய தேவஸ்ய கோப்த்ரு சக்திநிரூபணம்
சதுர்த்த மங்கமுத்திஷ்டம் அமுஷ்ய வ்பாஹ்தி:புந:
உதாஸீநோ குணபாவா தித்யுத்ப்ரேக்ஷா நிமித்தஜா
ஸ்வஸ்ய ஸ்வாமி நிவ்ருத்திர்யா ப்ராதிகூல்யஸ்ய வர்ஜநம்
ததங்கம் பஞ்சமம் ப்ரோக்தம் ஆஜ்ஞா வ்யாகாத வர்ஜநம்
அசாஸ்த்ரீயோவ ஸேவாது தத்வ்யாகாத உதீரித:
சராசராணி பூதாநி தாநிஸர்வாணி தத்வபு:
அதஸ்ததாநுகூல்யம் மேகார்ய மித்யேவ நி:சயம்
ஷஷ்டமாங்கம் ஸமுத்திஷ்டம் தத்வ்பாகாதோ நிராக்ருதி:
பூர்ணமங்கை ருபாங்கை:ச நமநம்தே ப்ரகீர்த்திதம்
ஸ்தூலோயம் நமஸ:சார்த்த: ஸூக்ஷ்மமந்யந்நிசாமய''

என்பனவாம் இப்படி யாகஸ்தூல யோஜனை நிரூபிக்கப்பட்டது. இதில் உபாயாந்தர ப்ரஸங்காஸஹமாய்க் கீழ் நிரூபிக்கப்பட்ட அங்கோபாங்கங்களோடே கூடினதாயும் ஸ்வயம் ப்ரயோஜனமாயுமுள்ள ப்ரஹ்வீபாவரூபமான, ஸித்தோபாய பூதனன ஸர்வேசுவரனுடைய சிருஷ்ட்யவதாராதி ரூபாநேகக்ருஷி பரம்பரையாற் பலித்திருக்கிற சேஷத்வ ஜ்ஞாநமே நம: சப்தார்த்தமென்று நிர்ணயிக்கப்பட்டது. இனி ஸூக்ஷ்ம யோஜனை நிர்ணயிக்கப்படும்.

(தொடரும்.)

ஸ்ரீ:

ஸ்ரீ வைஷ்ணவர்களின் பெருமை.

[152-ம் பக்கத் தொடர்ச்சி.]

முன் பத்துவகையான ஸ்ரீவைஷ்ணவத்தின் விளக்கமும், அவற்றிற்கு ப்ரமாணங்களும் சொல்லப்பட்டன. இனி ப்ரேமாவஸ்தையில் அஃதாவது அறிவு சிநேகமாக உருமாறும்போது பக்தத்வம், பாகவதத்வம் என்று இரண்டு விதங்களாகும். அவற்றுள் பக்தத்வ

மாவது:- எம்பெருமானடியாரிடத்தில் செலுத்தும் ப்ரியமாம். இதைக் குறித்து, "அநந்ய தேவதா பக்தா: யேமத்பக்த ஜனப்ரீயா: மாமேவ சரணம் ப்ராப்தா: தேமத்பக்தா ப்ரகீர்த்திதா:" என்று எம்பெருமான் அருளிச் செய்தான். இதன் பொருளாவது:- இதர தெய்வங்களிடத்திற் பக்தியற்று என்னையே சரணமடைந்தவர்களில் எவர்கள் என்னுடைய பக்தர்களிடத்தில் ப்ரீதியைச் செய்கிறார்களோ அவர்களே என்னுடைய பக்தர்களாவார்களென்பதாம். இதனால் முன் பரமைகாந்திக் குண்டானதாகச் சொன்ன ஜ்ஞானம் ஸ்நேக ரூபமானது குறிக்கப்பட்டது.

பாகவதத்வமாவது:- *பஞ்சஸம்ஸ்காரத்தையுடைய ஒருவன் †ஆகாரத்ரய ஸம்பந்நனாயிருந்து §அர்த்தபஞ்சகத்தை உள்ளபடி

---

* பஞ்சஸம்ஸ்காரமாவன:- தாபம், புண்ட்ரம், நாமம், யாகம் என்பனவாம். இவை ஆசார்யன் அநுக்ரஹித்து அவனால் செய்யப்படுவனவாம். ஸம்ஸ்காரமாவது:- ஒரு வஸ்துவை வைதிக க்ரியைக்கு உபயோகப்படும்படி செய்யக்கூடிய ஒரு கிரியாவிசேஷம். அஃதாவது:- சேதனன் (ஆத்மா) பகவத் பாகவதாசார்ய கைங்கர்யத்திற்கு உபயோகப்படுவதற்கு அவசியமாய்ச் செய்யத்தக்கதொன்றாம். தாபமாவது:- ஹோமாக்னியினால் தஹிக்கப்பட்ட சங்க சக்ரங்களைத் தோளிடங்களில் தரித்துக்கொள்வதாம். புண்ட்ரமாவது:- நேர்நோக்கி இடுகின்ற ஊர்த்வ புண்ட்ரமாம். நாமமாவது:-ஆசார்யனலிட்ட பெறும் ஸ்வரூபாநுரூபமான தாஸ்ய நாமமாம். மந்த்ரமாவது:- திருமந்த்ர முதலிய மந்த்ரோபதேசமாம். யாகமாவது:- பகவதாராதனமாம்.

† ஆகாரத்ரயமாவன:- அநந்யார்ஹசேஷத்வம், அநந்யசரணத்வம், அநந்யபோக்யத்வம் என்பனவாம். அநந்யார்ஹசேஷத்வமாவது:- பிறர்க்குரியவனாகாமல் எம்பெருமானுக்கே உரியவனாயிருப்பதாம். அநந்யசரணத்வமாவது:-எம்பெருமானை ஒழிய மற்றொன்றைத் தான் விரும்பிய பலத்துக்கு உபாயமாகக் கொள்ளாதிருத்தலாம். அநந்யபோக்யத்வமாவது:- எம்பெருமானை ஒழிய வேறொன்றைப் போக்யமாகக் கொள்ளாதிருத்தலாம்.

§ அர்த்த பஞ்சகமாவன:- தன் ஸ்வரூபமாகிய ஆத்மாவின் நிலை, பரமாத்மாவின்நிலை, தானடைய விரும்பும் பலத்தின்நிலை, தான் விரும்பிய பலத்தைக் கைப்படுத்தவல்ல ஸாதனத்தின்நிலை, தான் விரும்பிய பலத்தை அடையவொட்டாமல் தடுக்கிற விரோதியின்நிலை, என்ற ஐந்தாம். இவற்றை உள்ளபடி அறியுமறிவே அர்த்தபஞ்சக ஜ்ஞானமாம்.

யறிவதாம். இதைக்குறித்து, "அர்த்த பஞ்சகதத்வஜ்ஞா: பஞ்ச ஸம்ஸ்கார ஸம்ஸ்க்ருதா: ஆகாரத்ரய ஸம்பந்நா: மஹா பாகவதா ஸ்ம்ருதா:" என்று சொல்லப்பட்டது. பரமைகாந்தி எம்பெருமானால் விஷயீகரிக்கப்பட்ட பரகதஸ்வீகார முடையனுயிருத்தல்போல இந்த, பாகவதன் ஆசார்யனால் விஷயீகரிக்கப் பட்டவனுயிருப்பான். இது விஷயம் திருவடியை (ஹநுமானை) க்கொண்டு சீதாபிராட்டியை விஷயீகரித்த முறையாலும் அறியலாம். பாகவதனுகிய அதிகாரி தன்னையும், ஈசுவரனையும், பலத்தையும், உபாயத்தையும், உள்ள படி அறியும்போது, தன்னை பாகவத வசப்பட்டவனுகவும், ஈசுவரனை அடியாரிட்ட வழக்காயிருக்குமவனுகவும், பாகவத கைங்கர்யத்தையே பலமாகவும், ஆசார்யனையே உபாயமாகவும் நினைத்திருப்பான். இந்த அதிகாரி விரோதியை உள்ளபடி அறியும்போது எம் பெருமான் விஷயத்திற் செய்கின்ற பக்தியையும் விரோதியாக நினைத்திருப்பான். ஈசுவரவிஷயத்திற்செய்யும் பக்தியை விரோதியாகக் கொள்ளலாமோ வென்னில்? விரோதியாவது:- தன்னிஷ்டத்திற்குத் தடையாயிருப்பதாம். இஷ்டந்தான் அதிகாரிபேதத்தால் பலபடிப்பட்டிருக்கும். இவ்வதிகாரிக்கு இஷ்டமான ஆசார்யகைங்கர்யத்திற்குப் பகவத்பக்தி விரோதமாயிருக்குமாகையால், அதை இவன் விரோதமாகக்கொள்ளத்தட்டில்லை யென்க.

பரதாழ்வான், தன்னைவிரும்பிய தாய்மாமன் இருப்பிடஞ் சென்றகாலத்தில், சத்ருக்கனுழ்வான் தனக்கோர் நன்மையை விரும்பாமல் அப்பொழுதே அன்புடன் அவருக்கடிமை செய்யச் சென்றார். சத்ருக்கனுழ்வானுக்கு ராமபக்தியாகிய பாபமில்லையாதலால் இங்ஙனஞ்செய்யச் சென்றார் என்று வால்மீகிபகவான் குறிப்பித்துள்ளார். இதனுல் சத்ருக்கனுழ்வான், பரமபாகவதராய் விளங்கிய பரதாழ்வானுக்குக் கைங்கர்யஞ்செய்வதே முக்யப்ரயோஜனமாகக் கொண்டதினுல், ராமபக்தி முதலியவற்றையும் அவர் திருவுள்ளத்தால் முக்யமாகக்கொள்ளவில்லை யென்பதறியலாம். இன்னும் வடுகநம்பி பாலமுது காய்ச்சிக்கொண்டிருந்த காலத்தில் உடையவர், வடுகநம்பியை நோக்கி நீர் பெருமாளைச் சேவிக்க வாரீர் என்று அழைத்தார். அப்பொழுது வடுகநம்பி ஸ்வாமி! தேவரீருடைய பெருமாளைச் சேவிக்கவந்தால் அடியேனுடைய பெருமாளுக்குக் காய்ச்சுகிற பால் பொங்கிக் கொட்டிவிடும். இது நிற்க,

தேவரீருடைய பெருமாள் அடியேனுக்கு உத்தேசியமில்லை யென்ருர். இஃதன்றி உடையவருடைய நியமனத்தால், திருவேங்கடமுடையானுக்குக் கைங்கர்யஞ் செய்துகொண்டிருந்த அநந்தாழ்வானை ஒருசமயம் திருவேங்கடமுடையான் 'நம்மிடம் வரக்கடவீர்' என்று அருளப்பாடிட்டார். அப்பொழுது அநந்தாழ்வான் 'சற்று நேரம் சென்ருல் புஷ்பம் வாடிவிடுமே' என்ற கருத்தால் அருளப்பாட்டில் கண்வைக்காமல் கைங்கர்யத்தில் நோக்குடையவராய் கைங்கர்யத்தை முடித்துவிட்டு மாலையுங் கையுமாய்த் திருவேங்கடமுடையானிடஞ் சென்ருர். அப்பொழுது திருவேங்கடமுடையான் 'நாம் அழைத்தபோது வராதிருந்த உம்முடைய மாலை நமக்கு வேண்டா' என்று வெறுத்தார். அந்தாழ்வான் 'அடியேன் ஆசார்ய நியமனங்கொண்டு இங்குத் திருமாலைக் கைங்கர்யஞ் செய்கிறேனே யன்றி நீர் பூச்சூடுவதை உத்தேசியமாகக்கொள்ளவில்லை; ஆசார்ய கைங்கர்யத்துக்கு விரோதமாக நீர் சொல்வதைச் செய்யமாட்டேன்' என்ருர். இந்த வரலாறுகளால் ஆசார்ய கைங்கர்யத்துக்குப் பகவத் கைங்கர்யம் விரோதமாயிருக்குமென்பது குறிக்கப்பட்டது. இன்னும் இந்த அதிகாரி ஆசார்யனுடைய உகப்பிற்காக எம்பெருமானைத் தொழுவானேயன்றித் தனக்கு உத்தேசியமாகத் தொழமாட்டானென்பதும் அறியக்கிடக்கின்றன.

முன் குறிப்பிடப்பட்ட அத்வேஷ வைஷ்ணவர் முதலானரெல்லாம் ஸர்வேசுவரனையே உபாயமாகக் கொண்டவர்கள். இவன் ஆசார்யனையே உபாயமாகக் கொண்டவன். ஸம்ஸார தாபாக்னியினுல் தபிக்கப்பட்ட ஒருவனுக்கு ஸர்வேசுவரனுடைய சரிதங் கேட்டவுடன் அவன் விஷயத்தில் பக்தியுண்டாவது இயல்பாயிருக்கும். ஆசார்யன் விஷயத்தில் பக்தியுண்டாவது மாத்திரம் யார்க்கும் மிகவும் அரிதாயிருக்கும். ஏனென்ருல், 'ஆசார்யன் நம்போல உண்டுடுத்துத்திரிகிருன். இவனே நம்கார்யஞ் செய்யப்போகிருன்' என்று தம்மோடொத்த ஒருவனுகக் கருதுவராதலால் அவனிடத்தில் அன்புண்டாதல் அரிதாயிருக்குமென்பது தெளிவாகக் காணலாம். ஆகவே ஸர்வேசுவரனைவிட்டு ஆசார்யனிட்ட வழக்காய் அவனையே உபாயமாகப்பற்றியிருப்பது அரிதிலுமரிது. ஆதலால் இந்த ஆசார்ய நிஷ்டனை நிஷ்க்ருஷ்ட ஜ்ஞாநமுடையவனென்னத் தட்டில்லை. ப்ராஹ்மணனுக்கு உபநயனுதி ஸம்ஸ்காரத்தால் வேறு ஜன்மமுண்டாவதுபற்றி அவன் த்விஜன் (இருபிறப்பாளன்) என்று

வழங்கப்படுகிறுன். அதுபோல இந்த ஆசார்ய நிஷ்டனுக்கு அரிய ஜ்ஞாநமுண்டானதுபற்றி இவன் ஓர் விலக்ஷண ஜன்மமுடையவன் என்று சொல்லுதற்கு ஓர் குறையில்லை. "அன்று நான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்" என்று பெரியாரும் ஜ்ஞானம் பிறக்காத முன் தம்மைப் பிறக்காதவராயும், ஜ்ஞாநமுண்டானபோது தம்மைப் பிறந்தவராகவும் அருளிச்செய்தார். இந்த அதிகாரிக்குப் பாகவதத்வ ஜாதி குடிபுகுந்ததிஞல் அஹங்கார லேசமும் மறுவலிலாதபடி கழியப் பெற்றவனுனன். லோகதேசிகன் 'உத்க்ருஷ்ட ஜன்மம் சிரேஷ்டம்' என்று அருளிச்செய்ததும் அஹங்காரஞ் சிறிதுமில்லாத ஜ்ஞாநஜன்மத்தை நோக்கியதாகும். 'அஹங்கார தூஷிதமான கெட்டஜாதி கழிந்துவிடும்' என்றதும் இவ்வதிகாரியை நோக்கி உரைத்ததாகும்.

முன் குறிப்பிடப்பட்ட அத்வேஷ வைஷ்ணவம் முதலான வகைகளுள் ஏதேனும் ஒன்றில் சேர்த்தெண்ணுதற்கும் யோக்யதையற்றுப் பகவத் பாகவதவிஷயத்தில் பொறுமைகொண்டு திரியும் நமக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கும் ஆசார்ய ஸமாச்ரயணம் அதிகார பூர்த்தியால் வந்ததில்லை. முன்ஞேர்பற்றிவந்த வாஸனையால் ஏற்பட்டதாகும். ஆனுல் அதிகார பூர்த்தியால்வந்த ஆசார்ய ஸமாச்ரயண முடையார் அடியோடு இல்லையென்று சொல்லவுங் கூடாது. "ஒரொருவருண்டாகில் அத்தனைகாண்" என்றபடி அவர்கள் அபூர்வமாயிருப்பார்களென்று அறியத்தக்கது. இங்ஙனம் இந்த அதிகாரி துர்லபமாயிருக்கிறபடியால் அவரை இன்னுரென்று நாம் இப்பொழுது அறிவதற்கு அருமையாயிருக்கும். ஆகையாலன்றே ஒருவரோடொருவர் அளவளாவி நடப்பதற்கு நிர்பப்ந்தம் ஏற்படுகிறது. இது நிற்க,

இந்த அதிகாரிக்கு இழிந்தஜாதி கழிந்துவிடும் என்பதற்கு ப்ரமாணமுரைக்கப்படும். "மமமத் பக்தேஷு ப்ரீதிரப்யதி காபவேத்" என்பதாம். இதன்பொருள் என்னுடைய பக்தர்களிடம் எவர்கள் பக்தியைச் செய்கிறுர்கள் அவர்களிடம் எனக்கு எல்லை கடந்த ப்ரீதியுண்டாகுமென்பதாம். இதனுல் இந்த அதிகாரிக்கு எம்பெருமானுடைய எல்லைகடந்த ப்ரீதிக்கு விஷயமாகுந் தன்மையுண்டு. இப்படியிருப்பதால் இவன் ஆத்மஸத்தை பெற்றவனுவான். காலத்தோடு ஏற்பட்ட ஸம்பந்தத்தையே ஸத்தையென்று சொல்லப்

படும். ஆத்மா அனைத்தும் நித்யமாகையால் அவை, மூன்று காலத்திலும் ஸம்பந்தம் பெற்றவையாகும். அப்படியிருக்க இவன் ஸத்தை பெற்றவனுவானென்று குறிப்பிட்டது எம்பெருமான் ப்ரீதிக்கு விஷயமாக ஜீவித்திருப்பதையே விளக்கிக் காட்டியதாகும். ஸத்தைக்கு ப்ரயோஜனம் எம்பெருமானுடைய ப்ரீதிக்கு விஷயமாயிருப்பதேயாம். அல்லாதபோது ஸத்தை யிருந்துவைத்தும் இருப்பதாகக் கருதப்பட மாட்டாவென்று அறியக்கடவது.

காரப்பங்காடு, ஸ்ரீ. உ. வே. சிங்கப்பெருமாள் ஸ்வாமியின்,
தமையனுர் குமாரரும், அந்தேவாசியுமான,
வேங்கடாசார்யர், சேரங்குளம்.

(தொடரும்.)

ஸ்ரீ:

நல்லொழுக்கம்.

ஒவ்வொருவரும் அவசியமாகத் தெரிந்து அநுஷ்டிக்க வேண்டுவனவாய சில நல்லொழுக்கங்கள் ஸ்ரீவிஷ்ணு புராணத்திற் சொல்லப்பட்டுள்ளன. அவற்றை யாவரும் அறியும்படி இங்கே ஒருவகையாகத் தொகுத்து எழுதுதல் மிகுந்த பயனைத்தருவதாகும்.

ஒவ்வொருநாளும் அதிகாலையில் ப்ராஹ்ம முகூர்த்தத்தில் நித்திரைவிட்டு எழுந்திருக்கவேண்டும். எழுந்தவுடனே அவரவர் செய்யக்கூடிய நல்ல தர்மங்களையும், அதற்கு விரோதமில்லாத அர்த்தத்தையும் சிந்திக்கவேண்டும். தர்மார்த்தங்களுக்கு விருத்தமில்லாதபோது காமத்தையும் சிந்திக்கலாம். அவ்வாறு நினைப்பதனுல் தான் இம்மையினும் மறுமையினும் இன்பமுண்டாகும்.

அவ்வாறு எழுந்திருந்[illegible] பிறகு நிருதிதிக்கில் சிறிதுதூரம் சென்று, அங்கே மலஜல[illegible] கழித்துவிடல்வேண்டும். தன்நிழல்,

மரத்துநிழல், பசு, சூரியன், அக்னி, காற்று முதலியவற்றிற் கெதிராகவும், உழுத நிலத்திலும், பயிர் நடுவிலும், பசுக்களிருக்குமிடத்திலும், ஜனஸமூகத்திலும், ஆறு முதலியவற்றின் கரைகளிலும், தண்ணீரிலும், மயானத்திலும் மலஜலம் கழிக்கலாகாது. அன்றியும், யஜ்ஞோபவிதத்தை வலது காதில் சுற்றிக்கொண்டு, பகலில் வடக்குமுகமாயும், இரவில் தெற்குமுகமாயுமிருந்து அவற்றைக் கழிக்கவேண்டும்.

அதன்பின்பு சுத்தமான மண்ணைக்கொணர்ந்து சுத்தஜலத்தில் ஒருதரமும், அபானத்தில் மூன்றுதரமும் இடக்கையில் பத்துத்தரமும், மறுபடி இரண்டுகைகளிலும் ஏழுதரமும் மண்ணிட்டுத் தண்ணீரால் கைகால்களைக் கழுவவேண்டும். வீட்டினிடத்தே கால் கழுவுதல் முதலிய அசுத்தங்களை ஒருபொழுதும் செய்யலாகாது.

கால் கழுவினவுடனே நல்ல ஜலத்தில் மும்முறை ஆசமனஞ் செய்து, வாய்துடைத்தல், சிரசில் புரோக்ஷித்தல், ஹ்ருதய முதலான அங்கங்களைத் தொடுதல் முதலான காரியங்களைச் செய்யவேண்டும். பின்னர் கிரமந்தப்பாமல் பல்துலக்கி, அகமர்ஷணசூக்த முதலான மந்த்ரங்களை உச்சரித்துக்கொண்டே தீர்த்தமாடவேண்டும். எப்பொழுதும் நதிகள், நதங்கள் தடாகங்கள், தேவகாதங்கள் முதலான தீர்த்த விசேஷங்களிலேயே ஸ்நாநம்செய்தல் உத்தமம். நீராடினபிறகு பரிசுத்தமான ஆடையணிந்து, ஸந்த்யாவந்தனாதி கர்மாக்களை விதிப்படி அனுஷ்டிக்கவேண்டும்.

உதயகால ஸந்தியை நக்ஷத்திரங்கள் மறையாமலிருக்கையிலேயே ஒவ்வொருவரும் செய்யக்கடவர். சாயங்கால ஸந்தியைச் சூரியன் பாதிமறைந்து கொண்டிருக்கையிற் செய்யவேண்டும். காலையில் சூரியன் உதயமான பிறகும் தூங்குகிறவர்கள் ப்ராயச்சித்தம் செய்துகொள்ளக் கடமைப்பட்டவராவர். எவர்கள் ஸந்த்யாவந்தனங்களைச் செய்யாமல் விடுகிறார்களோ அவர்கள் தாமிசிரம் என்னும் நரகத்திற் புகுந்து வருந்துவார்கள்.

தமது க்ருஹத்தில் எழுந்தருளப்பண்ணியிருக்கும் அர்ச்சா விக்ரஹத்துக்குத் திருமஞ்சனம், திருமாலை, தூபதீபாதிகள், தளிகைகள் முதலான உபசாரங்களுடன் திருவாராதனம் செய்யவேண்டும். பகலிலும், இரவிலும் தம் வீட்டிற்குவருகிற அதிதிகளை

உபசரித்து அவர்களுக்கு அன்னமிட்டுத் தாமும் உணவு கொள்ளுதல் வேண்டும். அதிதிபூஜைசெய்பவன் அதிபாதகங்களினின்றும் விடுபடுவான். எவன் வீட்டினின்று அதிதி மனமுளைந்து போகிருனே அந்த க்ருஹஸ்தனுடைய புண்ணியங்களைத் தான் கைக்கொண்டு தன் பாபங்களை அவனுக்கு விட்டுச் செல்லுகின்றானென்று சொல்லப்படுகிறது.

புக்ககம்போகாத கன்னிகைகளையும், கருப்பவதியையும், கிழவர்களையும், பாலகரையும் தனக்குமுன்பு புஜிக்கும்படி செய்ய வேண்டும். இவர்களுண்ணுமல் தான் முந்தியுண்பவன் பாபத்தையே உண்கிருன். நீராடாமலும், ஜபம் செய்யாமலும், வைச்வதேவாதி சுத்தியில்லாமலும் உண்பவன் அசுத்தத்தை உண்கிருன்.

உணவு கொள்ளும்போது ஒற்றை வஸ்திரமுள்ளவனுகவும் ஈரமான கைகால்களுள்ளவனுகவும் இருத்தலாகாது. முகமலர்ச்சியுஞ் சந்தோஷமும் உள்ளவனுயிருக்கவேண்டும். கிழக்கு முகமாகவாகிலும் வடக்கு முகமாகவாகிலும் உட்கார்ந்து கொள்ளவேண்டும். மூலைக்கெதிராகப் புஜிப்பதும், மனக்கவலையோடு புஜிப்பதும் ஆகாவாம். அங்கஹீனர், வியாதியாளர் முதலியோர் கொணர்ந்ததும், அருவருப்பானதும், நன்ருகப் பாகஞ் செய்யப்படாததுமான உணவை ஒருபொழுதும் உட்கொள்ளுதலாகாது. முக்காலி, நாற்காலி முதலானவற்றில் வைத்திருக்கும் பாத்திரங்களில் உண்ணலாகாது. அசுத்தமான இடங்களிலும், சந்தி முதலான காலங்களிலும், நாநாவிதமான ஜனங்களுடைய சங்கத்திலும் உண்ணலாகாது. பழையவுணவுகளும், சாரமில்லாதனவும் உண்ணத்தக்கவைகளல்ல. தித்திப்பான பதார்த்தங்களை முதலிலும், புளிப்பும் உப்புமாயுள்ளவற்றை இடையிலும், கைப்பும் காரமுமாவனவற்றைக் கடைசியிலும் அருந்தவேண்டும்.

போஜனாரம்பத்தில் பிராணுதி ஐந்தாகுதிகளையும் நியமத்துடன் செய்யவேண்டும். அன்னத்தை தூஷித்தல் முதலிய செய்யாமல் மௌனமாய் உட்கொள்ளவேண்டும். சாப்பிட்டான பிறகு ஆபோசனம்பண்ணிக் கைகளை அடிவரை சுத்தம் செய்துகொண்டு மறுபடி ஆசமனம் செய்யவேண்டும்.

எப்பொழுதும் நல்ல வஸ்திரங்களையே தரித்துக்கொள்ள வேண்டும். தலைமயிரைச் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். டம்பை உசிதமாக அலங்கரித்துக் கொள்ளுதலும் வேண்டும்.

தேவதைகள், கோக்கள், பிராமணர், பெரியோர், ஆசாரியர் இவர்களைப் பூஜித்துவரவேண்டும். இரண்டு காலங்களிலும் சந்தியை வணங்கி அக்னி பரிசர்யையும் செய்துவரவேண்டும். வேதத்தில் எப்பொழுதும் நம்பிக்கை இழக்கலாகாது. உரியகாலங்களில் வேதம் ஓதுவதை ஒருபொழுதும் கைவிடலாகாது.

த்வேஷியாயுள்ளவன், பித்தன், பலரோடு பகைகொள்பவன், க்ரூரமுள்ளவன், அயல்மாதரிடத்து ஆசைவைப்போன், அற்பன், பொய்யன், அதிகச் செலவுசெய்வோன், வஞ்சகன் முதலான அயோக்யர்களுடன் கூடிப் பழகலாகாது. எப்பொழுதும் நல்ல நடத்தையுடையவர்களுடனேயே சேரவேண்டும். வேத சாஸ்திரங்களில் வல்லவரான சான்றோரை அடுத்திருக்கவேண்டும்.

எக்காரணத்தாலாயினும் சேரத்தகாதவர்களுடனே சேருதலும், வஞ்சனையாற் பிறரை மோசஞ்செய்ய நினைத்தலும் ஆகாவாம். பிறர் பொருளை அபகரிக்கலாகாது. பிறர் குற்றங்களை எடுத்துக் கூறலாகாது. யார்க்கும் பிரியமில்லாத வார்த்தைகளைச் சிறிதேனும் பேசலாகாது. பிரியமானபோதிலும் பொய் பேசலாகாது. உயர்ந்தவர்களோடாயினும் தாழ்ந்தவர்களோடாயினும் ஒருபொழுதும்பகைகொள்ளலாகாது. பகைமையினால்வரும் லாபம் உண்டாயினும் அதனை அறவே ஒதுக்கிவிடல்வேண்டும்.

துஷ்டவாகனங்களின்மேல் ஏறலாகாது. தண்ணீர் அலம்பியிடித்த ஆற்றின் கரைப்பக்கத்திற் சேரலாகாது. ஜலப்ரவாகத்திற்கெதிரே நீந்துதலும், தீப்பற்றிய வீட்டினுள் நுழைதலும், மரத்தின் நுனியில் ஏறுவதும் ஆகாவாம். நாற் சந்தியும், மயானமும், உத்யானமும் ஆகிய இடங்களில் இராக்காலத்திற் செல்லலாகாது. ஒன்றியாய் வழிப்பயணம் போகலாகாது. மழை, வெயில், முதலானவைகளிலும், காடுகளிலும் குடை பாதரக்ஷை இவற்றைத் தரித்தவனுகித் தேகத்திற்குத் தீங்கு நேரிடாதபடி சஞ்சரிக்கவேண்டும். நடக்கும்போது பராக்காயில்லாமல், நுகத்தடியளவுதூரம் வழியை நன்றாய்ப்பார்த்துச் செல்லவேண்டும். தனிமையாய்ப் பாழடைந்த

காட்டில் சஞ்சரித்தல், பாழும் வீட்டில் வாசஞ்செய்தல், இவை ஒருபொழுதும் ஆகாவாம். சர்ப்பங்கள், மதயானைகள் முதலான கொடிய பிராணிகளுடன் பழகலாகாது. பற்களினாலேனும் கொம்பு களாலேனும் துன்பஞ்செய்யும் ஜெந்துக்களையும் பனியையும் எதிர் காற்றையும் வெயிலையும் தூரத்தில் விடவேண்டும்.

அசுத்தமும் அயோக்யமுமான வெளிச்சங்களைப் பார்க்கலா காது. உதயாஸ்தமய காலத்தில் சூரியனைப் பார்க்கலாகாது. பூஜிக் கத்தக்கவர்களும், பிராமணர்களும் ஆகியவர்களுடைய நிழலைக் கடக்கலாகாது. மிக விழித்திருத்தல், மிகத்தூங்கல், மிகவுட்கார்ந் திருத்தல், மிகநிற்றல் மிகப்படுத்திருத்தல், மிக வருந்துதல், இவை எப்பொழுதும் நன்மையல்ல. மயிர், எலும்பு, முள், அசுத்தம், பலி யிட்டசாம்பல், உமி, குளிர்ந்தநீரால் நனைந்தபூமி, இவற்றை வழி யிலே கண்டால் தீண்டாமல் விலகிச் செல்லவேண்டும். கோழை, மலம், மூத்திரம், உதிரம் இவற்றை மிதிக்கலாகாது.

நெறு நெறெனப் பற்களைக் கடித்தலையும், வாயை மூடிக்கொள் ளாமல் கொட்டாவிவிடுவதையும், அடிக்கடி பெருமூச்செறிவதை யும், இருமுவதையும் தவிரவேண்டும். இரைச்சலிட்டுச் சிரிப்பதும், ஓசையுடன் அபானவாயு விடுவதும், நகங்களைக் கடிப்பதும், துரும்புகிள்ளுவதும், மீசையைக் கடிப்பதும், உதட்டைக் கசக்கிக் கொண்டிருப்பதும் செய்யத்தகாத காரியங்களாம்.

வஸ்திரமில்லாமலும், கச்சத்தைத் தாழவிட்டுக்கொண்டும் குளித்தல், தூங்கல், ஆசமனஞ் செய்தல், தேவபூஜை செய்தல், முதலானவைகளை ஆசரிக்கவேண்டாம். அப்படியே ஹோமம், தெய்வபூஜை, ஆசமனாதிகிரியைகள், ஜபம் இவற்றை ஒற்றை வஸ் திரத்துடனே செய்யவேண்டாம். நின்றுகொண்டு ஆசமனாதிகள் செய்தலும் ஆகாதகாரியம்.

ஸ்நானம் செய்தவுடனே வஸ்திரத்தினாலன்றிக் கைகளால் உடம்பைத் துடைக்கலாகாது. பிறர்மேல் நீர் தெறிக்கும்படி மயிரை உதறலாகாது. பெரியோர்களுக்கெதிரே காலை நீட்டலாகாது. குரு வுக்கு எதிரில் படுப்பதும், உட்காருவதும் கூடாது. அவரிடத்து மிகவும் வினயமாக நடந்துகொள்ளவேண்டும்.

தேவாலயங்களையும், நாற்சந்திகளையும், மங்களமானவற்றையும், வலஞ்சுற்றிப் போகவேண்டும். அல்லாதவைகளை இடஞ்சுற்றிப் போகவேண்டும். சந்திரன், சூரியன், அக்னி, தண்ணீர், காற்று பெரியோர் இவர்களுக்கு எதிரில் காறியுமிழ்வதும், நின்று கொண்டே மூத்திரம் விடுதலும், பலர் நடந்து செல்லும் வழிகளில் அங்ஙனம் செய்தலும் ஆகாது.

போஜனாதிகாலங்களிலும், ஜபஹோமார்ச்சனாதிகாலங்களிலும், கோழையுமிழ்தல், மூக்குச்சிந்தல், முதலிய அருவருப்பான காரியங்களைச் செய்யலாகாது. பல ஜனங்கள் கூடியிருக்குமிடங்களிலும் அவற்றைச் செய்யாதிருக்கவேண்டும். ஸ்திரீகளை அவமதித்து இகழலாகாது. அவர்களிடம் நம்பிக்கை கொள்ளுதலும் கூடாது. மங்களகரமானவற்றையும், புஷ்ப ரத்னாதிகளையும், பெரியோர்களையும், ஸேவித்தே வெளியிற் செல்லவேண்டும். மஹாஜனங்கள் சேருமிடங்களை வணங்கவேண்டும்.

கேட்போர் விரும்பும்படி ஹிதமாயும் மிதமாயும் பேசவேண்டும். கோபித்தவர்களைச் சமாதனம் செய்வோனும், யாரிடத்தும் விரோதமின்றி உறவினன்போ லிருப்பவனும், பயப்பட்டவர்களுக்குத் தேறுதல் சொல்லுபவனும், மிகவும் உத்தமமான ஒழுக்கமுடையவர்களாக மதிக்கப்படுவர். ஒருவர்க்கு அப்பிரியமாய் இருந்தபோதிலும் அவருக்கு நன்மையானவற்றைச் சொல்லுவதில் ஒருபொழுதும் பின்வாங்கக்கூடாது.

தனக்கு அபகாரம் செய்தவனுக்கும் உபகாரமே செய்பவனும், யாவரிடத்தும் கருணையும் மனஉருக்கமும் உடையவனும் ஆகிய இவர்களுக்கு மோக்ஷம் கையினிடத்தே உள்ளதென்று சொல்லலாம். முடிவாகச் சுருங்கச் சொல்லுமிடத்து, எல்லாவுயிர்களுக்கும் ஹிதமான காரியங்களையே எப்பொழுதும் செய்துவரல் வேண்டும். அதுவே நல்லொழுக்கமென்று சொல்லப்படுகிறது.

நல்லொழுக்கத்தைக் கைக்கொண்டுள்ள மஹான்களுடைய ப்ரபாவத்தினால்தான் உலகமே நிலைபெறுகின்றது. அவர்கள் அறம், பொருள், இன்பம் வீடென்னும் நால்வகைப்புருஷார்த்தங்களையும் அடைந்து, இம்மை, மறுமை இரண்டிலும் நலம் பெற்றிருப்பார்கள்.

ஸ்ரீ:

ஓர் எதிருரை.

"ஸ்ரீராமாநுஜஸித்தாந்தப்ரகாசிகா விமர்சனம்" என்று பெயர் புனையப்பெற்ற ஒரு புஸ்தகம் வெளிவந்துளது. அது, தற்பொழுது சிதம்பரத்திலிருக்கும் சிவகாசி ஹைஸ்கூல் தலைமைத்தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமாந் வித்வான் வேங்கடராஜுலுரெட்டியாரால் இயற்றப்பெற்றதாகும். அதில், நமது பத்திரிகையின் முதல் வால்யம் எட்டாவது பகுதியில் வெளிவந்துள்ள 'ராமாநுஜஸித்தாந்தப்ரகாசிகை'யிற்கண்ட விஷயங்கள் நமது ஸித்தாந்தத்திற்கு விரோதமுள்ளன என்று பொறிக்கப்பெற்றுள்ளதனால் அதுவிஷயம் நன்கு ஆராய்ந்துரைப்பான் இங்கு 'ஓரெதிருரை'யெனத் தலைக்குறிப்பிட்டு எழுதப்பெறுகிறது.

இக்காலத்திற் சிலர் மதிநுட்பமும், நூலுணர்வும் சாலப் படைத்த மாண்புடைய பெரியோர் ஆய்ந்தாய்ந்துரைத்த அரும் பெறலுரைக்குக் குற்றங்கூறித் தமக்கோர் பெருமைபடைத்துக் கொள்ள முயலுகிறார்கள். இங்ஙனமிருப்பதுங் காலவியல்பென்றே கருதத்தக்கது. இது நிற்க,

"வலம்புரிமுத்திற்குலம்புரிபிறப்பும்
வான்யாறன்னதூய்மையும்வான்யாறு
நிலம்படர்ந்தன்னநலம்படரொழுக்கமும்
*   *   *   *   *
இன்னோரன்னதொன்னெறிமரபினர்
பன்னருஞ்சிறப்பினல்லாசிரியர்"

என்பதனால் நற்குடிப்பிறப்பும், அறிவொழுக்கங்களும் ஒருங்கமையப் பெற்றவனே ஆசிரியனாவானென்று தமிழரும் உரைத்தார்கள். இங்ஙனம் இது, ஸர்வஸாதாரணமாக யாவராலும் ஒப்புக்கொள்ளத்தக்க தொன்றும் என்பதற்கு 'ராமாநுஜஸித்தாந்தப்ரகாசிகை'யில் பலசான்றுகாட்டி நிறுவப்பெற்றுளது. இத்தகைய விஷயத்தை 'விமர்சனம்' மறுத்துரைக்கப் புகுமேல் அஃகியகன்ற அறிவிற் சிறந்தார் அதைப் பொருட்படுத்துவரோ?

“குலக்ரமாகதனான ஆசார்யனைத்தானும் வம்சபரம்பரையாக ஆசிரயிக்கு மொருவன் அந்த ஆசார்யனுக்குப் பாதித்யாவஹமான தோஷமில்லாதிருக்கும் பக்ஷத்தில் மற்றொரு ஆசார்யனை அந்த ஆசார்யனுடைய நியமனமில்லாமல் ஆசிரயித்தானாகில் குலக்ரமாகதராயுள்ள வஸிஷ்டரையும், தத்புத்ரர்களையும் நிராகரித்து விசுவாமித்ரரையடைந்த திரிசங்குவின்படியாம்” என்பன ‘ராமாநுஜஸித்தாந்தப்ரகாசிகை’யிற்கண்ட தெளிபொருளுரைகளாம். இவற்றிற்கு,

“क्रमागतायाभिषेकेन त्यक्त्वा देशिकान्तरम्
तदन्यं भक्त्या भजते स भवेन्नरकभाजनम्”
“क्रमागतं गुरुं [illegible] तिरस्कार जपातकात्
नश्यते नरो [illegible] दुःखस्य भाजनम्”

என்று ‘பாஞ்சராத்ரம் பரமபுருஷஸம்ஹிதை’யிற் சொல்லப்பட்டுள்ள பிரமாணங்களும், எடுத்து விளக்கப்பட்டன. ஜ்ஞாநாநுஷ்டானங்களில் யாதொரு குறைபாடில்லாத ஆசார்யனைவிட்டுப் பிறிதோர் ஆசார்யனைப்பற்றுதல் அதிதீவிரமான பாபச் செயலாமென்பதற்குத் திரிசங்குவைச் சான்றாக காட்டலாயிற்று.

‘விமர்சனம்’ 5, 6-ம் பக்கங்களில் இங்குத் திரிசங்குவைத் திருஷ்டாந்தமாகக் காட்டியது திருக்குடைத்தாம். திரிசங்கு வஸிஷ்டரை நோக்கி என்னைத்தனுவொடும் ஸ்வர்க்கம் எய்விக்க உமக்கொல்லாதாயின் வேறொரு குருவைநாடி அங்ஙனஞ் செய்வேனென்றமையால் அதற்கு வஸிட்டர் சபித்தார். அதனால் அவன் புலைபனுயொழிந்தான். இதுபற்றியே தேவர்களும், “ஆங்கவன் துரக்கமெய்த அமரர்கள் வெகுண்டு நீச, ஈங்குவந்திடுவதென்னே” என்று வெகுண்டு திரிசங்குவைத்தள்ளினார்கள். ஆகையால் திரிசங்கு புலைபனானதற்கு வஸிஷ்டர் சாபமொழியே காரணமாமேயன்றிப் பிறிதில்லை. அங்ஙனமிருக்க இந்தத் திரிசங்கு விருத்தாந்தத்தைக் குருத்துரோகத்திற்குத் திருஷ்டாந்தமாக எடுத்துரைத்தது சிறிதும் பொருத்தமின்றாகும் என்று கூறப்பட்டுளது.

"நினக்கோலாதாகினையர்ணிலத்தியாவரேனும்
மனக்கினியாரைநாடிவகுப்பல்யான்வேள்வியென்னச்
சினக்கொடுந்திறலோய்முன்னர்த்தேசிகப்பிழைத்துவேறோர்
நினக்கிதனுடிநின்றாய்நீசனுய்விடுதியென்றான்"

என்றதனால் திரிசங்கு சாஸ்த்ர விரோதமாக 'மற்றோர் ஆசார்யனை யடையக்கடவேன்' என்று கூறியதைக்கேட்ட வஸிஷ்டர் சினங் கொண்டு 'உரிய ஆசார்யனைவிட்டு வேறொருவனையடைய விரும்பிய நீ நீசனுகக்கடவாய்' என்று சபித்தார். இங்ஙனம் வஸிஷ்டர் சபித் ததற்குக்காரணம் திரிசங்கு 'யான் பிறிதோர் ஆசார்யனை நாடுவேன்' என்று கொவங்கொண்டு கூறியதேயாம். சாபகார்யத்தால் திரிசங்கு நீசனுனென்றால் வஸிஷ்டர் சாபமிடுதற்குக் காரணம் திரிசங்கு கூறிய விரோதமொழியென்றுதானே சொல்லவேண்டும். பிறிதா றின்றே. இதனால், திரிசங்கு நீசனுயொழிதற்கு அவன் சாஸ்திர விரோதமான கார்யத்தில் முயன்றதே முக்யகாரணமாகும் என்பது பெறப்பட்டது. இங்கு வஸிஷ்டர் தம்வயின் திரிசங்கு செய்தபிழை குருத்துரோகமாம் என்பார் எம்வயிற்பிழைத்து என்னாது 'தேசி கற்பிழைத்து என்று தம்மைப் படர்க்கையாக்கிக் கூறினார். இது வும் இங்கு நோக்கத்தக்கதே. "........அர்ச்சாவதாரத்தில் உபா தான ஸ்ம்ருதியிலுங்காட்டில் க்ரூரம். அத்தை மாத்ருயோநி ப்ரீக்ஷையோடொக்கும் என்று சாஸ்திரம் சொல்லும். திரிசங்கு வைப்போலே கர்மசண்டாளனுப் மார்பிலிட்ட யஜ்ஞோபவீதம் தானே வாராய்விடும்" என்று லோகதேசிகன் பாகவதாபசாரத்திற் குத் திரிசங்குவைத் திருஷ்டாந்தமாக அருளிச்செய்தார். இந்த வாக்யங்களுக்கு மணவாளமாமுனிகள் கருத்துப் பொருளுரைக்க வந்தவிடத்தில் "அங்கு சாபமாகையாலே ப்ரத்யக்ஷமாயிற்று; இங்கு சாஸ்த்ர ஸித்தமாகையாலே ஜ்ஞாநதிருஷ்டி விஷயமாயிருக் கும்" என்று அருளிச்செய்தார். இதனால், ஒருவன் நிக்ரஹாநுக் ரஹமுடைய பாகவத விஷயத்திற்செய்த அபசாரத்தால் சாபம்வந்த விடத்தில் அப்பொழுதே அவன் அயோக்யனு யொழிவானென்ப தும், மற்றவிடத்தில் அவ்வபசாரம் அதிருஷ்டரூபமாய் நின்று பின் னர்ப் பலத்தைத் தருமென்பதும், பாகவதாபசாரம் பெற்றான் அப்

பொழுதே அவன் அயோக்யனைப் விடக்காணேமெனல் கூடாதென்பதும் பெறப்பட்டன.

'குலக்ரமாகதனுக்குப் பாதித்யாவஹமான தோஷமில்லாதிருக்கும் பக்ஷத்தில்' என்றுரைத்ததனுல், அவ்வாசார்யனுக்குப் பாதித்யாவஹமான தோஷமிருக்கும்பக்ஷத்தில் ஜ்ஞாநாநுஷ்டானஸம்பந்நனுள்ள வேறொருவனே யடையலாமென்பது தானே பெறப்படுகிறதன்றோ! அங்ஙனமிருக்க. 7-வது பக்கத்தில் "........ ஜ்ஞாநஹீன குருஸம்பந்தமானது ஓட்டை ஓடத்தைச் சேர்ந்த ஒழுக லோடத் தோபாதி" என்று அநுவதித்துக்கூறியது பயனில் கூற்றன்றோ!

7-வது பக்கத்தில், முதலியாண்டான் திருநாராயணபுரத்தில் எழுந்தருளியிருந்த காலத்தில் அவர் சிஷ்யரில் ஒருவரான ஒரு ஸ்ரீவைஷ்ணவர் கோயில் (ஸ்ரீரங்கம்) வந்து எம்பார் ஸந்நிதியை அடைந்து 'அடியேனுக்கு வேறு ஆசார்ய ஸம்பந்தமில்லை' என்றுரைத்து எம்பாரால் பஞ்சஸம்ஸ்காரம் செய்யப்பெற்று அவருக்குக் கைங்கர்யஞ்செய்து கொண்டிருந்தாரன்றோ! அப்பொழுது அவருக்குக் குருத் துரோகம் பிடிக்கவில்லையே. இது நிற்க, முதலியாண்டானுக்குப் பாதித்யாவஹமான தோஷமுண்டென்று சொல்ல ஒன்றுமே என்றுரைக்கப் பெற்றுளது.

திருநாராயணபுரம் எழுந்தருளியிருந்த முதலியாண்டான் கோயிலுக் கெழுந்தருளிய காலத்தில் மறுமுறையும் எம்பாரை ஆசிரயித்த அந்த ஸ்ரீவைஷ்ணவர் அவரைத் தண்டன்ஸமர்ப்பித்து அவருக்கு வேண்டிய கைங்கர்யஞ்செய்து நின்றார். இந்நிலைகண்ட எம்பார் 'இந்த ஸ்ரீவைஷ்ணவர் ஆண்டான் சிஷ்யரன்றோ நாம் ஆராயாமல் என்ன கார்யஞ்செய்தோம்' என்று கழிவிரக்கங்கொண்டு ஆண்டானைநோக்கி 'ஸ்வாமி! அடியேன் தேவரீர் விஷயத்தில் கனக்க வபசாரப்பட்டேன்' என்றார். அப்பொழுது ஆண்டான் "ஒரு கிணற்றிலேவிழுந்த ஒருவனுக்கு இரண்டுபேர் கைகொடுத்தால் எடுக்குமவர்களுக்கும் எளிதாய் ஏறுமவனுக்கும் எளிதாயிருக்குமிறே" என்று அருளிச்செய்தார். இங்கு எம்பார் கழிவிரக்கங்

கொண்டதினால் உத்தமாசார்யனைபடைந்த ஒரு சிஷ்யனை வேறோர் ஆசார்யன் ஆராயாமல் தனக்குச் சிஷ்யனுக்கி அடிமை கொள்ள லாகாதென்பது தெளிவாகிறதோடு தொன்றுதொட்டு ஆசிரயித்து வந்த உத்தமாசார்யனைவிட்டு வேறோர் ஆசார்யனையடைதல் சிஷ்யனுக்குக் கூடாதென்பதும் பெறப்படும். ஆனால், இந்த ஸ்ரீவைஷ்ணவர் உத்தமாசார்யனை விட்டுப்பிறிதோராசார்யனைப் பற்றுதல் கூடுமோவெனின்? அதுக்குக் கருத்து வேறுண்டென்க. அது வருமாறு:—

> "தன்னாரியனுக்குத்தானடிமைசெய்வதவன்
> இந்நாடுதன்னிலிருக்குநாள்—அந்நேர்
> அறிந்துமதிலாசையின்றியாசாரியனைப்
> பிரிந்திருப்பாரார்மனமேபேசு"

என்றபடி ஆசார்ய கைங்கர்ய நிஷ்டர் ஆசார்யனைவிட்டு ஒருபோதும் பிரிந்திருக்கமாட்டார். இங்குக்குறிப்பிடப்பட்ட முதலியாண்டான் சிஷ்யரும், ஆசார்ய கைங்கர்ய நிஷ்டராய் விளங்கினர். ஆண்டான் திருநாராயணபுரத்திற் கெழுந்தருளிய பின்னர் இவர் பிரிவாற்றுக வராய் 'அந்தோ! இனி நாம் என்செய்வது வாளாவிருந்து காலத்தைப் போக்குகின்றோமே' என்று ஆற்றொணுக் கவலைகொண்டு கோயில்வந்து எம்பாரையணுகி 'நம்மாசார்யனின் இவர் வேறல்லர்' என்ற அபேதவுணர்வுற்றுத் தம் நிலைமைமறந்து ஆசார்ய கைங்கர்யத்தில் நோக்குடையவராய் எம்பாரை ஆசிரயித்துக் கைங்கர்யத்தைப் பெற்றுரென்றறியக்கிடக்கிறது. ஆழ்வாருக்கு "மண்டிணிஞாலமும் ஏழ்கடலும் நீள்விசும்புங் கழிபப் பெரிதால்" என்றபடி எம்பெருமான் விஷயத்தில் அளவிடவொண்ணு அன்பு மேலிட்டபொழுது தம் நிலைமறந்து தம்மைப்பெண்ணுகப்பாவித்து எம்பெருமானிடத்தில் தூதுவிட்டதாகப்பேசியும், தாய்க் கூற்றுகவும், தோழிக்கூற்றுகவு மொழிந்தும் தரித்ததுபோல இந்த ஆசார்ய கைங்கர்ய நிஷ்டருக்கும் ஒருபொய் கூறியேனும் ஆசார்ய கைங்கர்யத்தைச் செய்தல்லது தரிக்கவொண்ணுத்தசையுண்டாயிற்று. இவர் இங்குக்கூறிய பொய்க்கு ஆசார்ய கைங்கர்யமே பலமாய் முடிந்ததினால் அது வாய்மையிடத்ததாய், பொலிவுற்றதென்க. இஷ்ட விரோதம் பாபம் என்ற முறைபற்றிச் சத்ருக்கனாழ்வானுக்கு ராம

பக்தி பாபமாய் ஒழிந்ததுபோல இங்கு இவருக்கு உண்மையுரைத்தல் விரோதமாய் முடிந்தது. எம்பார் சாஸ்த்ர விரோதமான கார்யத்தில் முயற்சிக்கமாட்டாரென்பதறிந்தே ஈண்டு இவர் உண்மை கூறுதுவிட்டாரென்பது புலனாகிறது. இது நிற்க, தம் நிலைகடந்த பக்தியுடையாரை சாஸ்திரங் கட்டுப்படுத்தாதென்பது மூதுரையன்றோ! இங்ஙனமிருக்கப் பொதுவிதிக்கு இதை எடுத்துக்காட்டி நிறுவத்துணிவது சாலப் பொருந்தாததென்றே ஒழிக்கற்பாற்று. யாண்டும் பொதுவிதி சிறப்பு விதியைப் பாதிக்காதென்றே அறிந்து கொள்ளத்தக்கது.

8-வது பக்கத்திற், பகவத்ஸாக்ஷாத்காரம் வந்தவர்களிடத்திற் குல முதலானவற்றைச் சிந்திக்கலாகாது அவர்களே ஆசார்ய பதத்திற்குரியராவரென்றால் பகவத்ஸாக்ஷாத்காரம் பெறாத எல்லாரும் ப்ராஹ்மணரல்லரோ? இதனால் பகவத் ஸாக்ஷாத்காரம் வந்தவர்களே ஆசார்யராதற்கு உரியவராவரென்று வெளியாவதோடு ஏகாரத்தால் பகவத் ஸாக்ஷாத்காரமில்லாதவர் ஆசார்ய பதத்திற்குரியரல்லரென்பதும் பெறப்படுகின்றன. இதனால் ஆசார்யராவதற்குப் பகவத் ஸாக்ஷாத்காரம் காரணமேயன்றி ஜாதிகாரணம் அன்றென்பது வெளியாகிறது; என்று எழுதப்பெற்றுள்ளது.

இங்கு அவர்களே ஆசார்ய பதத்திற்கு உரிய ரென்றிருப்பதை அவர்களே யெனத்திருத்திக்கொள்க. அவர்களே என்பது அச்சுப் பிழை.

மேலும் 8-வது பக்கத்தில், ஜ்ஞாநிக்கு வர்ணாச்ரம நியமமில்லை யென்றிருப்பினும் மற்றவர்ணத்தார் ஜ்ஞாநோபதேசஞ் செய்யலாகாது; என்று முற்கூறியது முற்றிலும் முரணுடைத்தென்பது பிற்கூறியவுரையால் விளங்குமென்று குறிப்பிடப்பட்டுளது.

நற்குடியிற் பிறந்தாரும், பகவத் ஸாக்ஷாத்காரமுடையோரும் ஆசார்யபதவியை வஹிப்பதற்குரிமை யுடையவராவார்கள்; ஏனைய வர்ணத்தார் ஜ்ஞாநமுடையவரா யிருந்தாலும் ஆசார்ய பதவியை வஹிப்பதற்குரிமை யுடையவராகார் என்று பாரத்வாஜஸம்ஹிதை

கூறும்; என்று ப்ரகாசிகையில் தக்கப்ரமாணங்காட்டித் தெளிவுறக் கூறியது பொருத்தமுடையதேயாம். இது பொருத்தமன்றெனக் கூறும் கூற்று நலமுடைத்தன்றெனவிடுக்க.

9-வது பக்கத்தில் பகவத் ஸாக்ஷாத்காரம் வந்தவர்களும் லோகக்ஷேபம் (கலக்கம்) பிறக்குமென்று ஸர்வஸாதாரணமாக உபதேசித்தார்களில்லை என்பதற்கு நம்மாழ்வாரையும், திருமழிசையாழ்வாரையும் சான்றாக எடுத்துரைத்தது நமக்குப் புலப்படவில்லை. இது நிற்க, திருவாய்மொழியில் 'வீடு மின்முற்றவும்' 'கிளரொளியிளமை' 'ஒருநாயகம்' 'ஒன்றுந்தேவும்' 'சொன்னால் விரோதம்' முதலிய திருவாய்மொழிகளும், நான்முகன்திருவந்தாதியில் 'நான்முகனை' 'சென்று வணங்குமினோ' 'கொண்டு குடங்கால்' என்ற பாசுரங்களும் ஸர்வஸாதாரணமான உபதேசமன்றோ என்று வரையப்பெற்றுளது.

இங்கு, ஆசார்யபதம் வஹித்துத்தம்மை அண்டினார்க்கு உபதேசஞ்செய்தற்குரியார் இன்னாரென்று ஆராய்ந்து பேசுகிற பிரகரணமாதலால் நம்மாழ்வார், திருமழிசைப்பிரான் என்ற இவர்கள் தம் ஜீவிதகாலத்தில் ஆசார்ய பதம்வஹித்துப் பலருக்கும் உபதேசித்தார்களில்லைஎன்று குறிப்பிட்டதே ஒழியப்பிறிதில்லை. 'திருவாய்மொழி'யிலும் 'நான்முகன்திருவந்தாதி'யிலும் முறையே ஆழ்வாரும், திருமழிசைப்பிரானும் பலரைநோக்கி உபதேசித்தது வெள்ளிடை மலைபோல் விளங்கிக்கிடக்கிற விஷயம் உலகறிந்ததொன்றும். இது விஷயத்தைக்குறித்து இங்குச் சிறிதேனும் பேசவந்ததில்லை என்றுணர்ந்துகொள்க.

பெரியாழ்வாரும், தொண்டரடிப்பொடியாழ்வாரும் பிராஹ்மண ஸ்ரேஷ்டரன்றே! இவர்களாவது தம் ஜீவிதகாலத்தில் ஸர்வஸாதாரணமாக உபதேசித்தார்களோ என்னில் இவர்கள், உலகிற்கு ஈசுவர கைங்கர்யமே புருஷார்த்தமென்பதை அநுஷ்டித்துக்காட்டத்:துளவத் தொண்டில் துவக்குற்ற திருவுள்ளமுடையவராய்த் தம் வாணாளைக் கழித்தார்களென்பது பிரஸித்தி. ஆகையாலன்றோ இவர்கள் ஸர்வஸாதாரணமாகப் பிறருக்கு உபதேசிப்பதற்கு யோக்யதை படைத்தவராயிருந்தவிடத்தும், அது விஷயத்திற் கண்

வைத்தார்களில்லையென்க. 'விமர்சனம்' நம்மாழ்வார்; திருமழிசைப் பிரான் என்ற இவர்கள் ஸர்வஸாதாரணமாக உபதேசித்தார்களில்லை என்றுரைத்ததை ஆராயப்புக்கு, அது புலப்படவில்லையென முற்பகர்ந்து பின்னர்த் தெரிந்ததுபோலப் பாவித்துப் பேசத் துணிந்துவிட்டபடியால் இங்ஙனம் மருட்சியுற்று நின்றது. இது பற்றி எள்ளற்பாற்றன்றென ஒழிக.

9, 10-ம் பக்கங்களில், திருமழிசைப்பிரானைச் சூத்திரராகக் கொள்வதெங்ஙனம்? இவர், பார்க்கவ மஹருஷியின் பத்னி திருவயிறுவாய்க்கப்பெற்றுப் பன்னிருதிங்கள்முடிந்த பின்னர்க் கருவுயிர்க்கப் பிண்டாக்ருதியாய்த் திருவவதரித்தார். இங்ஙனம் அவதரித்த இவர் பெரிய பிராட்டியாரின் ஸம்ரக்ஷிதத்தாலே திருவுருப்பெற்று ஸர்வேசுவரனுடைய அநுக்ரஹத்தால் பசிதாகம் ஒழியப்பெற்றிருந்தார். பின் பிரம்பறுப்பாளனால் வளர்க்கப்பட்டு வந்தாரென்று ஆறாயிரப்படிகுருபரம்பரை உணர்த்தாநின்றது. இது நிற்க, எம்பெருமானுடைய அநுக்ரஹத்தால் பசிதாகம் ஒழியப்பெற்ற இவர் பிரம்பறுப்பாளனால் வளர்க்கப்பட்ட காரணம்பற்றி இவர் சூத்திரராவரோ? வளர்ந்தவிடம் முக்யமாகக்கொண்டால் கண்ணுவ மஹருஷிபால் வளர்க்கப்பட்ட சகுந்தலை ப்ராஹ்மண ஸ்திரீ ஆகவேண்டுமே? இஃதன்றிக் கங்காதேவியால் வளர்க்கப்பட்ட பீஷ்மர் மனுஷ்யராகாமையும், குயில் காக்கையாகாமையும் காண்கின்றோமல்லவா! இதனால் வளர்ந்தவிடம் நோக்கிக் கூறலாகாதென்பது வழக்காறுதலறிக; என்று உரைத்துப்போந்தது.

இங்கு 'விமர்சனம்' ஆறாயிரப்படி குருபரம்பரையைக் கருவியாகக்கொண்டு திருமழிசைப்பிரானைக் குறித்துப் பேசிச்சென்றது. இங்ஙனம் பேசிச்சென்ற இது, அந்தக் குருபரம்பரைத் தொடக்கத்தில் "ஆழ்வார் திருமழிசைப்பிரானுகிறார் 'ஒருத்தி மகனாய்ப் பிறந்தோரிரவி லொருத்தி மகனாயொளித்துவளர்'ந்தருளின கிருஷ்ணனைப்போலேயாய்த்து அவதரித்தருளினபடியும், வளர்ந்தபடியும். எங்ஙனே யென்னில்........................பதுகுலத்திலே பிறந்து நந்தன் குலமதலையாய் கோபகுலத்திலே வளர்ந்தருளினாப்போலே இவ்வாழ்வாருடைய திருவவதாரமும் ஒரு பிறவியிலே இரு பிறவி

யாயிறேயிருப்பது." என்றுரைத்திருப்பதைக் கண்வைக்காதொழிந்தது. குருபரம்பரை, திருமழிசைப்பிரான் பிரம்பறுப்பாளனூல் வளர்க்கப்பட்டார் என்பதுபற்றியும் இவருக்கு ஓர் பிறப்புண்டென்று கருதியன்றே கிருஷ்ணனைப்போலே இவரது பிறப்பும் வளர்ப்புமிருக்குமென்று உவமை முகத்தாலுரைத்துச் சென்றது. இது நிற்க,

பெரும்புலியூரில் வாழ்ந்திருந்த அந்தணாளர்கள் திருமழிசைப்பிரானை மாறுபடக்கருதி வேதாத்யயனத்தை நிறுத்தினர்கள். பின்பு அவர்கள் நிறுத்திய விடந்தெரியாது திகைக்கின்றபொழுது ஆழ்வார் கருநெல்லை உகிராலிடந்து காட்டினர். இஃதன்றிப் பெரும்புலியூரடிகளுடைய யாகசாலையிலுள்ளார் ஆழ்வாருடைய ப்ரபாவங் கேட்டு ஆழ்வாருக்கு அக்ரபூஜை செய்தகாலத்தில் அங்குள்ள சடங்கிகளெல்லாம் ஆழ்வாரை வேறுபடக் கருதினர்கள். இதனால், அக்காலத்திலுள்ள ப்ராஹ்மணர் இவரை அவரவர்ணத்தராகக் கருதினர்களென்பதும், ஆழ்வாரும், வர்ணதர்மிகளா யிருப்பார் தம்மை மாறுபடக்கருதி அநர்த்தப்படாதிருக்கத் திருவுள்ளம் பற்றித் தம் வாயால் வேதவாக்யத்தைச் சொல்லாமல் குறிப்பால் தெரிவித்தாரென்று விளங்குகின்றதனால் இவரும் தம்மை அங்ஙனமே கருதினரென்பதும் பெறப்படுகின்றன. ஆழ்வாரை மாறுபடக்கருதிய அந்தணாளரும் பின்னர் இவரை வழிபட்டுள்ளார்களாதலால் இவர் ப்ராஹ்மணராகக் கருதப்படமாட்டாரோவெனில்? அவர்களும் இவரது ப்ரபாவங்கண்டு வணங்கினரேயல்லது ஜாதிபற்றி வணங்கினரல்லரெனக்கொள்க.

தத்வஜ்ஞானத்தையறிய அவாக்கொண்டு தம் வாழ்நாளை யோகநிலையிலே கழித்துப்போந்த முற்காலத்தில் பீஜமே ப்ராதான்யமுடையது; க்ஷேத்ரம் ப்ரதானமன்றென்பது யாவருக்கும் ஒப்பமுடிந்ததொன்றும். இதிலும் சில ஸூக்ஷ்ம விஷயமுண்டு. அவையாவன:— ப்ராஹ்மணபீஜம் சூத்ரகுடியில் வளருமாகில் அதற்கு விதித்தகாலங்களில் சௌளோபநயனாதி ஸம்ஸ்காரங்கள் நடத்தப் பெறுமையாலே ப்ராஹ்மண்யம் வருவதில்லை. *சூத்ரக்ஷேத்ரஜன்

*சூத்ரக்ஷேத்ரஜன்—சூத்ரஸ்திரீயினிடத்திற் பிறந்தவன்.

ப்ராஹ்மணக்குடியில் வளருவானுகில் அவனுக்கு உபநயனுதி ஸம்ஸ்காரத்தைப் பெறுவதற்கு யோக்யதையிருப்பதினுல் ப்ராஹ்மண்யம் வரலாம். இதனுல், இழிந்தகுடியில் வாழ்ந்த ப்ராஹ்மண பீஜத்திற்கு ஸம்ஸ்காரத்தைப் பெருததூ தடையென்றும், நல்ல க்ஷேத்ரத்தில் வாழ்ந்த சூத்ரக்ஷேத்ரஜனுக்கு ஸம்ஸ்காரத்தைப் பெறுதற்கு யோக்யதையிருப்பதால் தடையில்லை என்றும் அறிந்து கொள்ளவேண்டும். இந்த லக்ஷணங்களைக்கொண்டு நோக்கினுல் முற் கூறப்பட்ட விஷயங்கள் பிறழ்ச்சியுருமை காணலாம்.

“க்ஷேத்ரபூதா ஸ்ம்ருதா நாரீ பீஜபூத ஸ்ம்ருத: புமாந்
க்ஷேத்ரபீஜ ஸமாயோகாத் ஸம்பவஸ் ஸர்வ தேஹிநாம்”

பெண்மகளை க்ஷேத்ரமாகவும், ஆண்மகனைப் பீஜமாகவும்கொள்க. இவ்விரண்டின் சேர்க்கையே எல்லாப் பிராணிகளுடைய உற்பத்திக் குக்காரணமாகும்; என்று கூறப்பட்ட இந்த வாக்யமும் இங்குக்கரு தத்தக்கது. இன்னும் க்ஷேத்ரம், பீஜம் என்ற இவற்றைப்பற்றி ஸ்மிருதி வாக்யங்கள் பல இருக்கின்றன; அவற்றையெல்லால் ஈண்டெடுத் துரைப்பின் விரியுமாதலால் ஒழிக்கலாயின. “ஸத்யஸ் ஸ்திதோ யாவத் பீஜம் தாவத் ப்ராதாந்யதே” எவ்வளவு காலம்வரை ஸத்யம் நிலைபெற்று நிற்குமோ அவ்வளவு காலம்வரைதான் பீஜத் திற்குப்ராதான்யமுண்டு; என்று சொல்லப்பட்டதினுல் அறத்தொடு சாரா இன்பநுகர்ச்சியிற் கண்ணுகக்கொண்டுதிரிகிற இக்கலிகாலத் தில் பீஜம் க்ஷேத்ரம் என்ற இரண்டும் சமமாயிருத்தல்வேண்டும். ஏற்றத்தாழ்ச்சியிருக்கலாகாது. இதனுல், இக்காலத்தில் ப்ராஹ்மண பீஜம் நல்லக்ஷேத்ரத்தில் வாழ்ந்தாலொழிய அதற்கு ப்ராஹ்மண்யம் வருவதில்லை. பீஜத்திற்கு ப்ராதான்யம் முற்காலத்திலும், பீஜம், க்ஷேத்ரம் என்ற இரண்டுக்கும் சாம்யம் இக்காலத்திலுமாக கால பேதத்தால் வேறுபட்டன.

திருமழிசைப்பிரான், அந்நபாநாதிகளில் விருப்பற்று ஸர்வேசுவரனுடைய க்ருபாம்ருதத்தையுண்டு பிரம்பறுப்பாளனுகிய திருவாளன் க்ருஹத்தில் வளர்ந்தருளியிருந்தார் என்று சொல்லப்பட்டுளது. இங்கு ஆழ்வார் பகவத்க்ருபாம்ருதத்தை

யுண்டு களிப்புற்றிருந்தாரென்றதனால் அவர் ஜ்ஞாநப்ராஹ்மண்ய முடையவராயிருந்தாரென்பது விளங்கும். குறித்தகாலத்தில் உபநயநாதி ஸம்ஸ்காரம் நடைபெறயோக்கியதையில்லை. ஆதலால் இவருக்கு கர்மப்ராஹ்மண்யம் வரவில்லை என்று அறியலாகும். ஜ்ஞாநப்ராஹ்மண்யம், கர்மப்ராஹ்மண்யம் என்பனவற்றைப் பின்னர் நிரூபித்துரைக்கலாகும். வளர்ந்தவிடம்பற்றிப் பீஷ்மர், சகுந்தலை என்பவர்கட்கு முறையே தெய்வத்தன்மையும், ப்ராஹ்மண வியல்பும் வரவில்லையாதலால் வளர்ந்தவிடங் காரணமாக ஜாதிமாறிவிடாதென்பதே வழக்காறுகுமென வாதிப்பது முறையுடைத்தன்றென்பதை முற்கூறியவற்றால் உணர்ந்துகொள்க. விசித்திரமான ஈசுவரப் படைப்பில் அண்டஜங்களாகிய பக்ஷிகளுள் சில தாமிட்ட குடம்பைகளை (முட்டைகளை) த்தாமே பொறிப்பதில்லை. அவற்றை அடைகாத்துப் பொறிக்கு மியல்புடைய பிறபக்ஷிகளே பார்ப்புகளைப் பெறும். இவ்வியல்பு பண்டே சிருஷ்டியிலே அமைந்துகிடப்ப தொன்றும். இங்ஙனமிருக்கக் குயில், காக்கை யாவதில்லை என்று 'விமர்சனம்' எடுத்துக்காட்டியது நகைச்சுவைக்குரியதாய் விளங்குகிறது.

11-ம்பக்கத்தில் பகவத் ஸாக்ஷாத்காரம் பிறந்தவரிடத்தில் குல முதலானவற்றைச் சிந்திக்கலாகாது; என்றுரைத்ததற்கு விரோதமாக நம்மாழ்வாரும் திருமழிசையாழ்வாரும் சூத்திரராதலின் இவர்கள் லோகக்ஷேபம் பிறக்குமென்று ஸர்வஸாதாரணமாக உபதேசித்தார்களில்லை என்று குல முதலானவற்றைப் பகவத் ஸாக்ஷாத்காரம்வந்த பெரியாரிடத்திலும் ஏற்றிக்கூறுவது வியப்பைத் தருவதாகும் என்று வரையப்பெற்றுள்ளது.

பகவத் ஸாக்ஷாத்காரம் வந்தவரிடத்தில் குலமுதலானவற்றைச் சிந்திக்கலாகாதென்ற விதி உலகில்வாழுநரை நோக்கியுரைத்ததாகும். பகவத் ஸாக்ஷாத்காரம் வந்தவர்களில் தலையானவர்களான நம்மாழ்வார், திருமழிசையாழ்வார் என்ற இவர்கள் உயர்பதவியை வஹித்து உலகிற்கு உண்மை நிலையுணர்த்துதற்குரிமை படைத்தவராயிருந்தபோதிலும் அவர்களும் லோகக்ஷேபம் பிறக்குமென்று ஸர்வஸாதாரணமாக உபதேசித்தார்களில்லையென்று அவர்களுடைய

Roll-117 382

அநுஷ்டானத்தை உரைக்குமுகத்தான் பகவதாஜ்ஞையின் வைபவஞ் சொல்லப்பட்டதாயிற்று. இதனுல், அப்பெரியார்கட்கு ஓர் குறை கூறியதாகுமோ? ராஜாவினுடைய அணுக்கத்தொண்டனு யிருந்தாலும் அவன் ராஜாஜ்ஞையை மீறிநடக்காதிருப்பது பிரஸித்தியன்றே! இன்னும் 'ராமாநுஜஸித்தாந்தப்ரகாசிகை' யில் "பகவத் ஸாக்ஷாத்காரம் வந்தவர்களும் லோகக்ஷேபம் பிறக்குமென்று ஸர்வஸாதாரணமாக உபதேசித்தார்களில்லை. இந்த விஷயம் நம்மாழ்வாரிடத்திலும், திருமழிசையாழ்வாரிடத்திலும், காணலாம்" என்று குறிப்பிடப்பெற்றுள்ள வாக்யங்களின் நயத்தை நோக்கினுலும் அவைகள், அவர்களைப் பெருமைப்படுத்தியுரைத்தனவாகவே காணப்படுகின்றன. அவை வருமாறு:— 'பகவத் ஸாக்ஷாத்காரம் பிறந்தவர்களும்' என்ற உயர்வுசிறப்பும்மையால் ப்ரஹ்மவஸ்துவைக் கண்டறிந்த அறப்பெரியார்களென்பது பெறப்படும். 'ஸர்வஸாதாரணமாக உபதேசித்தார்களில்லை' என்றதனுல் ப்ரார்த்தித்தடைந்த சிலர்கட்கே ரஹஸ்யமாக உபதேசித்து பகவதாஜ்ஞையாகிற வரம்பை உலகறியக்கடவாது நின்று அதற்கு ஓர் வைபவத்தை யுண்டுபண்ணினுர்கள் என்றறியலாம். 'இதுவிஷயம் நம்மாழ்வாரிடத்திலும், திருமழிசையாழ்வாரிடத்திலுங்காணலாம்' என்றது, முற்கூறப்பட்ட பெருமைக்கு இலக்கியமாய் விளங்குவார்கள்; இவர்களே என்பதுணர நின்றது. 'விமர்சனம்' இங்ஙனமுரைத்த வாக்யத்தின் சீர்மையறியாது குறைகூறுவதிற் கண்ணுற்று "நம்மாழ்வாரும், திருமழிசையாழ்வாரும் சூத்திரராதலின் ஸர்வஸாதாரணமாக உபதேசித்தார்களில்லையென்று அவர்கள் விஷயத்தில் குல முதலானவற்றை யேற்றிக்கூறியது ஆச்சர்யத்தை யுண்டுபண்ணுகிறது." என்று வாய்வந்தபடியெல்லாம் சொல்லத்தலைப்பட்டுவிட்டது. இங்ஙனம் ஒன்றை ஒன்ருகமாற்றிக்கூறிய இதை எவரேனும் ஓர் பொருட்படுத்துவரோ? இது, 'விமர்சனம்' என்ற பெயர்பெறுதற்குரிமையற்றதாயிருக்குமென்பதை யர்வரும் அறிவார்களாக.

ப. அ.

(தொடரும்.)

MAHAMAHOPADHYAYA
V. SWAMINATHA IYER LIBRARY